**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

முன்னிலை : திரு. **எஸ்.என். தனஞ்ஜெயன், B.B.A., B.L.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 -ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.82/2023**

**CNR.No. TNTM08000-14-2023**

1. முருகம்மாள்
2. செல்வராணி
3. சாந்தி
4. லட்சுமி
5. ராஜீவ்காந்தி ......வாதி

**/எதிர்/**

1. ஏழுமலை
2. கன்னியப்பன் ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக விசாரணைக்காக இறுதியாக 07.11.2023 அன்று வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. D. தங்கதுரை அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், பின்னர் வாதி தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை ஆராய்ந்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து இன்று, இதுகுறித்து இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

தாவா ஷெட்யூல் சொத்துக்கள் வாதிகளுக்கு உரிமையானது என விளம்புகை செய்யக்கோரியும், தாவா ஷெட்யூல் சொத்துக்கள் வாதிகள் அனுபவிப்பதை 1,2 பிரதிவாதிகளோ அல்லது அவர்களுடைய ஆட்களோ, அல்லது அவர்களுடைய ஏஜெண்ட்டுகளோ தடை

செய்யாமல் இருக்க ஒரு நிரந்தர தடை உத்தரவு பிறப்பிக்க்கோரியும் மற்றும் தாவா செலவினங்களை வாதிகளுக்கு 1,2 பிரதிவாதிகள் கட்டிக்கொடுக்க தக்க உத்தரவு பிறப்பிக்கக் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம்**

i) தாவா செட்யூல் சொத்து 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 5 வாதிகளின் தந்தையுமான அண்ணாமலை என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி தாவா ஜெட்யூல் சொத்தை அண்ணாமலை என்பவர் ஆண்டு அனுபவித்து வந்தார் என்றும் மேற்படி தாவா ஜெட்யூல் சொத்தை அண்ணாமலை என்பவர் ஆண்டு அனுபவித்து வந்து வருவாய்த்துறையில் அவரது பெயருக்கு வழங்கப்பட்ட நத்தம் சிட்டாவின் நகலை இத்தாவாவுடன் தாக்கல் செய்யப்பட்டுகிறது.

ii) மேற்படி தாவா ஜெட்யூல் சொத்தை அண்ணாமலை என்பவர்ஆண்டு அனுபவித்து வந்து தாவா ஜெட்யூல் சொத்து குறித்து எந்தவித ஏற்பாடும் செய்யாமல் அண்ணாமலை என்பவர் திடீரென்று 14.04.1993 அன்று காலமாகிவிட்டார். மேற்படி அண்ணாமலையின் இறப்புச் சான்று நகலை இந்த தாவாவுடன் வாதிகள் தாக்கல் செய்கின்றார்கள். அதன் பின்னிட்டு அண்ணாமலை என்பவர் காலமான பிறகு அவரது வாரிசுகளான வாதிகள் தாவா ஜெட்யூல் சொத்தினை ஆண்டு அனுபவித்து வந்தார்கள். அண்ணாமலை காலமான பிறகு வாதிகள் அவருடைய வாரிசு சான்று கணினி நகலை இந்த தாவாவுடன் வாதிகள்தாக்கல் செய்கின்றார்கள்.

iii) மேலும் அண்ணாமலையின் உடன்பிறந்த சகோதரரான 1ம் பிரதிவாதி ஏழுமலை என்பவருக்கும் மற்றும் 1ம் பிரதிவாதியின் மகனான 2ம் பிரதிவாதி கன்னியப்பன் என்பவருக்கும் தாவா ஜெட்யூல் சொத்தில் எவ்வித உரிமையுமில்லை. அவ்வாறு இருக்கையில் பிரதிவாதிகள் வீண் பிரச்சனை செய்து தகராறு செய்து வருகின்றார்கள். இது சட்டப்படியான தவறாகும். தாவா சொத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் எந்தவித உரிமையும், பாத்தியதையும், அருகதையும் இல்லை.

iv) மேற்படி தாவா ஜெட்யூல் சொத்தினை அண்ணாமலை இறந்த பிறகு அவரது வாரிசுகளான வாதிகளுக்கு மட்டுமே உரிமையும் பாத்தியதையும் உள்ள சொத்தாகும். இச்சொத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கு உரிமையோ, பாத்தியதையோ, அருகதையோ கிடையாது.

அவ்வாறு இருக்கையில் 1ம் பிரதிவாதி அண்ணாமலையின் உடன்பிறந்த சகோதரர் என்ற முறையில் வாதிகளுக்கு சொந்தமான தாவா ஷெட்யூல் சொத்தில் வீண் உரிமை கொண்டாடி தொல்லைகள் கொடுத்து வருகின்றார்கள். பிரதிவாதிகளின் இந்த செயலானது சட்டத்திற்கு முரணானதாகும்.

v) மேற்படி தாவா ஷெட்யூல் சொத்தினை வாதிகள் இன்றுவரை ஆண்டு அனுபவித்து வருகிறார்கள். மேற்படி தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு மட்டுமே உரிமையான சொத்தாகும். இச்சொத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும், பாத்தியமும் இல்லை. மேலும் இச்சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் அத்துமீறி பிரவேசிக்க முயற்சி செய்து வருகிறார்கள். இது சட்டத்திற்கு தவறாகும். பிரதிவாதிகளின் செயல்கள் கண்டிக்கத்தக்க ஒன்றாகும். மேற்படி 1, 2 பிரதிவாதிகள் தாவா ஷெட்யூல் சொத்தை அத்துமீறிபிரவேசிக்க முயற்சி செய்தபோது ஊர் பெரியவர்கள் துணையுடன் வாதிகள் தடுத்து நிறுத்திவிட்டார்கள்.

vi) மேற்படி பிரதிவாதிகள் தாவா ஷெட்யூல் சொத்தில் வீண் உரிமை கொண்டாடி பிரச்சனை செய்துவருவாதாலும், வாதிகளுக்கு தொல்லை கொடுத்து வருவதாலும், அதனால் வாதிகள் தங்களது வழக்கறிஞர் மூலம் 09.03.2023 அன்று 1,2 பிரதிவாதிகளுக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றும் அதனை 1,2 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டார்கள் என்றும் மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்ட பிறகும் 1,2 பிரதிவாதிகள் எந்தவித பதில் அறிவிப்பும் அளிக்கவில்லை.

vii) மேற்படி 1,2 பிரதிவாதிகள் பணபலம், படைபலம் மிக்கவர்கள் சட்டத்திற்கு கட்டுப்படாதவர்கள் அவர்கள் எந்தநேரத்திலும் வாதிகளுக்குச் சொந்தமான தாவா சொத்துக்களில் அத்துமீறி பிரவேசிக்கக்கூடிய அபாயம் ஏற்படும் என்றும் அதனால் பிரதிவாதிகளின் செயலை நீதிமன்றத்தால் மட்டுமே தடுக்க முடியும் என்பதால் வாதிகள் நீதிமன்றத்தை நாடி வந்துள்ளார்கள்.

viii) ஆகவே தாவா ஷெட்யூல் சொத்துக்கள் வாதிகளுக்கு உரிமையானது என விளம்புகை செய்யக்கோரியும் தாவா ஷெட்யூல் சொத்துக்களை வாதிகள் அனுபவிப்பதை 1,2 பிரதிவாதிகளோ அல்லது அவர்களுடைய ஆட்களோ அல்லது அவர்களுடைய

ஏஜென்ட்டுகளோ தடை செய்யாமல் இருக்க ஒரு நிரந்தர தடை உத்தரவு பிறப்பிக்கக்கோரியும் இந்த தாவாவினை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார்கள்.

3) பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டார்கள்

4) வாதிகள் தரப்பில் சாந்தி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வாதி தரப்பில் வ.த.சா.ஆ.1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

வாதி தரப்பில் தனது எழுத்துப்பூர்வமான வாதுரையை தாக்கல் செய்துள்ளார்.

6) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் யாதெனில் வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

**<u>தீர்வு</u>**

7) பிரதிவாதிகள் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டநிலையில் 3ம் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு வா.த.சா-ஆ1 முதல் 6 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். வா.த.சா.ஆ3 தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் பெறப்பட்ட முத்திரை இருந்தாலும், அதற்குரிய விண்ணப்பமோ, முழுஆவணங்களோ, மேற்படி ஆவணத்தை அளித்த அதிகாரியோ, சாட்சியத்தில் முன்னிறுத்தப்படவில்லை என்றாலும், பிரதிவாதிகள் ஆஜராகி எதிர்க்காத நிலையில் வா.த.சா-ஆ3 தாவா சொத்தில் அண்ணாமலையின் பெயரில் ஏற்பட்டிருப்பதை முதல் நிலையில் எடுத்துக்கொள்ளலாம். அண்ணாமலை இறந்துவிட்டது வா.த.சா.ஆ.1 மூலமும், வாதிகளை அவரிகளின் வாரிசுகள் என்பது வா.த.சா.ஆ2ன் மூலமும் துலங்குகிறது. பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வா.த.சா.ஆ-4 வழக்கறிஞர் அறிவிப்பு வா.த.சா.ஆ.5,6 ஒப்புகை அட்டைகள் மூலம் அவர்கள் பெற்றுக்கொண்டது உறுதியாகின்ற நிலையில், இந்த வழக்கிலும் ஆஜராகாமல் இருப்பதன் மூலம் வாதியின் கட்சிக்கு ஆட்சேபனை இல்லை என்பதை பிரதிவாதிகள் உணர்த்தியுள்ள நிலையில், வாதிகள்

**<u>இறுதியாக,</u>** வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

1. தாவா சொத்து வாதிகளுக்கு உரிமையானது என விளம்புகை செய்யப்படுகிறது.

2. தாவா சொத்தை வாதிகள் அனுபவிப்பதை 1,2 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ஆம் நாளான இன்று இந்நீதிமன்றம் அவையறிய பகரப்பட்டது.

ஓம்/- திரு. எஸ். என். தனஞ்ஜெயன்,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**வாதி தரப்பு சாட்சிகள்:-**

வா.சா.1 - சாந்தி

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| வா.த.சா.ஆ.1 | : | அண்ணாமலையின் இறப்பு சான்றிதழ் |
| வா.த.சா.ஆ-2 | : | வாரிசு சான்றிதழ் |
| வா.த.சா.ஆ-3 | : | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட சிட்டா நகல்( 2 தாள்கள்) |
| வா.த.சா.ஆ-4 | : | 09.03.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.த.சா.ஆ-5 | : | 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை |
| வா.த.சா.ஆ-6 | : | 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை

ஓம்/- திரு. எஸ். என். தனஞ்ஜெயன்,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.